RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 151 | ஜுன்.8 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "இண்டியா கூட்டணி ஒற்றுமையாக உள்ளது; 23 கட்சிகள் பங்கேற்க உள்ளன": காங்கிரஸ்

புதுடெல்லி: ஜுன்.8-

இண்டியா கூட்டணி ஒற்றுமையாக இருப்பதாகவும், நாளை நடைபெற உள்ள இண்டியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டத்தில் 23 கட்சிகள் பங்கேற்க உள்ளதாகவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு இண்டியா கூட்டணியின் முதல் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நாளை நடைபெற உள்ளது. டெல்லியில் உள்ள கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் மதியம் 12 மணிக்கு தொடங்க உள்ள இந்த கூட்டத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை, விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இந்த கூட்டத்தில், பங்கேற்கப் போவதில்லை என்று திமுக அறிவித்துள்ளது. திமுக கூட்டணியில் தேர்தலை சந்தித்த காங்கிரஸ், தேர்தல் முடிவுக்குப் பிறகு தவெகவுடன் கூட்டணி சேர்ந்ததால் திமுக இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்நிலையில், இந்த கூட்டம் தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக ஊடக எக்ஸ் பதிவில், "புதுடெல்லியில் உள்ள கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் இன்று (ஜுன் 8, 2026) மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ள 'இண்டியா' கூட்டணி கூட்டத்தில் 23 அரசியல் கட்சிகள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளன. சில கட்சிகள் தங்கள் சொந்தக் காரணங்களால் இந்தக் கூட்டத்தில் இணைய இயலாமையை வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும், மோடி அரசின் சில கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அவை கடுமையாக எதிர்க்கின்றன.



குறிப்பாக, லட்சக்கணக்கான இந்தியர்களின் வாக்குரிமையைப் பறித்தது, அரசியலமைப்பைத் தொடர்ந்து தாக்கி வருவது, புலனாய்வு அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறிவைப்பது, கோடிக்கணக்கான இந்தியர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கச் செய்தது, தொடர் விலைவாசி உயர்வால் குடும்ப பட்ஜெட்டைச் சீர்குலைத்தது, லட்சக்கணக்கான இளைஞர்களின் நம்பிக்கைகளையும் லட்சியங்களையும் ஏமாற்றியது, முதலீட்டுச் சூழலை பலவீனப்படுத்தியது, வெளியுறவுக் கொள்கை மூலம் தேசிய நலன்களைப் பாதிப்படையச் செய்தது ஆகியவற்றை அவை எதிர்க்கின்றன. இந்தியாவைப் போலவே, 'இந்தியா' கூட்டணியும் பன்முகத்தன்மையுடன் ஒற்றுமையாக நிற்கிறது." என தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி பங்கேற்க இருக்கிறார். மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சியை கைப்பற்றி உள்ள நிலையில் இண்டியா கூட்டணியுடன் இணக்கமாக இருப்பது மிகவும் முக்கியம் என அவர் கருதுகிறார். நாளைய கூட்டம் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள திரிணமூல் காங்கிரஸ் எம்பி டெரெக் ஓ பிரையன், "பொதுவான நோக்கத்துடனும் தெளிவான குறிக்கோளுடனும் இக்கூட்டம் நடைபெறும். 'இண்டியா' கூட்டணி ஒற்றுமையாக உள்ளது. பல கட்சிகள் தோழமை உணர்வுடன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க ஆவலுடன் உள்ளன." என தெரிவித்துள்ளார்.

## "மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இந்த ஆட்சி..." மு.க.ஸ்டாலின்



சென்னை: ஜுன்.8-

மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என திமுக தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற, செய்யூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் பனையூர் பாபு தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். அப்போது திமுக தலைவர் ஸ்டாலின் உரையாற்றும் போது, '' திமுகவைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் வேலை அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் உழைப்பதற்குத் தயாராக நாங்கள் இருக்கிறோம், "நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம்" என்று நமக்கு இன்றைக்குத் துணையாக வந்து சேர்ந்திருக்கும் பாபுவை வரவேற்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒரு ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதெல்லாம் நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நான் சொன்னேன், "ஆறு மாதங்களுக்கு இதைப்பற்றி நான் பேசப் போவதில்லை" என்று. ஆனால், ஆறு மாதங்களுக்கு முன்பே பேச வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமோ என்ற அச்சம்தான் இருந்து கொண்டிருக்கிறது; வந்துவிட்டது.

அதைப் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள், இந்த விமர்சனங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஆறு மாதம் அல்ல, ஐந்து மாதம் அல்ல, நான்கு மாதம் அல்ல... மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றைக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் இன்றைக்கு நீங்களும் வந்து இந்த இயக்கத்தில் உங்களை இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, கழகம் ஈடுபடும் எந்தப் பணிகளாக இருந்தாலும், அந்தப் பணிகளுக்கு நீங்களும் ஒத்துழைப்பு தருவதற்காக வந்திருக்கிறீர்கள்" என்று அவர் பேசினார்.

## ஆன்லைன் பத்திரப் பதிவு அரசின் புதிய நடைமுறை அறிவிப்பு

சென்னை: ஜுன்.8-

பதிவுத்துறையில் இணையவழியில் "வருகை இல்லா ஆவணப்பதிவு" (Anywhere Registration) கட்டாயமாக்கல் தொடர்பான அறிவிப்பு தமிழக பத்திர பதிவுத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக பத்திர பதிவுத்துறைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆவணப்பதிவு நடைமுறைகளை எளிமைப்படுத்த பொதுமக்கள் தாங்களே நேரடியாக இணையவழியே ஆவணப்பதிவு செய்வதற்கான முறையை பதிவுத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆவணப்பதிவு முறை மூலம் பொதுமக்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் எங்கிருந்தும் எப்போது வேண்டுமானாலும் (24X7X365) இணையதளத்தின் மூலம் இணையவழி தங்களது ஆவணங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.



ஆவணப் பதிவிற்கு சார்பதிவாளர் ஒப்புதல் அளித்ததும், சார்பதிவாளரின் மின்னணு கையொப்பத்துடன் ஆவணமானது சம்பந்தப்பட்ட நபரின் உள்நுழைவிற்கும் அலைபேசிக்கு புலனம் (Whatsapp) மூலமும் அனுப்பி வைக்கப்படும். அந்த ஆவணத்தை ஆவணதாரர்கள் தங்கள் உள்நுழைவு வழியே தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"வருகை இல்லா ஆவணப்பதிவு (Anywhere Registration)" நடைமுறை விரைவில் கட்டாயமாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

சார்பதிவாளர் அலுவலகம் வராமலேயே பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள்:

முதல் விற்பனை மனை (First sale of Plot)

முதல் விற்பனை அடுக்குமாடி குடியிருப்பு (First sale of Flat)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விற்பனை ஆவணங்கள்

வங்கிகளில் பெறும் கடனுக்கான அடமானம் மற்றும் ரசீது ஆவணங்கள்

பொதுமக்கள், கட்டுமான நிறுவனங்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வங்கிகள், வழக்கறிஞர்கள்

பதிவுத்துறை இணையதளத்தில் தங்களது உள்நுழைவினை தாங்களே உருவாக்கி மேற்படி ஆவணங்களை(ரசீது) இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர்கள், எழுதிப் பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவருக்கும் ஆதார் அட்டை மேலேற்றம் செய்யவேண்டும்

ஆதார் ஆணையத்தின் மூலம் கைரேகை அல்லது கருவிழி படலம் வழி ஆதார் சரிபார்க்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப தேவைகள்

இணைய இணைப்பு

UIDAI அங்கீகரிக்கப் பட்ட எல்1 விரல் ரேகை இயந்திரம் மற்றும் கருவிழிப்படலம் கவரும் கருவி

புகைப்படக் கருவி (Webcam)

சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

வன்பொருள்(Hardware): முகமது யூனுஸ், அருண்குமார் 7397574067 9940446694

மென்பொருள் (Software): சீனிவாஸ் கணேஸ், டில்லி பாபு 6369798973 8525805957

## வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை ரூ.29 உயர்வு



சென்னை, ஜுன்.8-

வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை ரூ.29 உயர்த்தப்பட்டு உள்ளது. இந்த புதிய விலை உயர்வு ( ஜுன் 7) முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்தியன் ஆயில், பாரத், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், ஆகிய பொதுத் துறையை சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள், வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், ஹோட்டல் உள்ளிட்ட வணிகப் பிரிவுக்கு, 19 கிலோ எடையிலும், சமையல் காஸ் சிலிண்டர்களை வினியோகம் செய்கின்றன.

இந்நிறுவனங்கள், சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, உள்நாட்டில் மாதந்தோறும் முதல் நாளன்று, சமையல் காஸ் சிலிண்டர் விலையில் மாற்றம் செய்கின்றன.

தமிழகத்தில், இம்மாதம் (ஜுன் 1ம் தேதி), வீட்டு காஸ் சிலிண்டர் விலை மாற்றம் செய்யப்படாமல், 928.50 ரூபாயாகவே இருந்தது. வணிக காஸ் சிலிண்டர் விலை, 46 ரூபாய் உயர்ந்து, 3,237 ரூபாயில் இருந்து, 3,283 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று (ஜுன் 7) நாடு முழுவதும் 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.29 உயர்ந்துள்ளது. சென்னையில் ரூ.928.50 ஆக இருந்த சிலிண்டர் விலை 957.50 ரூபாயாக அதிகரித்து இருக்கிறது.

அதேபோல் டில்லியில் ரூ.942 ஆகவும், மும்பையில் ரூ.941.50 ஆகவும், கொல்கத்தாவில் ரூ.968 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கான காஸ் சிலிண்டர் விலை உயர்ந்து இருப்பது பெண்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## "திமுக அடித்த கமிஷனை கூட்டணி தர்மத்துக்காக வெளியே சொல்லவில்லை" : மாணிக்கம் தாகூர்

சிவகாசி: ஜுன்.8-

திமுக அடித்த கமிஷனை பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட்டணி தர்மத்திற்காக நாங்கள் அதை வெளியே சொல்லவில்லை என்று காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் கலந்து கொண்ட மாணிக்கம் தாகூர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: 2026 தேர்தல் தோல்வி பலருக்கும் ஷாக் கொடுத்துள்ளது. அதில் இருந்து மீள முடியாத சிலர் புலம்பி வருகின்றனர். இவ்வளவு நாட்களாக உதயநிதி இடம் இருந்து வந்த புலம்பல் தற்போது சீமானிடம் இருந்து வருகிறது.

பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்துள்ள, சொந்த மாவட்டத்திலேயே டெபாசிட் வாங்க முடியாத சீமான் 100 ஆண்டு பாரம்பரிய கட்சியை பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. சீமான் மரியாதையாக பேசாவிட்டால் அதே பாணியில் காங்கிரஸ் காரன் திருப்பி அடிப்பான். இங்கிலாந்து, கனடாவுக்கு வசூல் செய்ய செல்லும் சீமான், இலங்கைக்கு சென்று தமிழர்களை பார்க்கவில்லை.

2014ல் காங்கிரஸ் தனியாக போட்டியிட்டு தோல்வி அடைந்தது. 2016ல் தனியாக போட்டியிட்ட திமுகவும் தோல்வி அடைந்தது. அதன்பின் திமுக தான் கூட்டணிக்கு வந்தது. ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவியுங்கள் என நாங்கள் கேட்கவில்லை. தமிழ்நாட்டில் ராகுல் காந்தி மீது இருக்கும் நம்பிக்கை, மரியாதையை வாக்குகளாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஸ்டாலின், ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக காட்டினார்.

சீமானின் செல்வாக்கு சரிய ஆரம்பித்து விட்டது. திமுக ஆதரவில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்பிக்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என சீமான் பேசியுள்ளார். காங்கிரஸ் வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற உதயநிதியை ராஜினாமா செய்ய சொல்லுங்கள். உதயநிதி ராஜினாமா செய்த 24 மணி நேரத்தில் நான் எனது பதவியை ராஜினாமா செய்வேன். சவாலுக்கு தயாரா என சீமான் தனது தம்பி உதயநிதியிடம் கேட்டு சொல்ல வேண்டும்.

தேர்தலுக்கு முன் திமுகவை விமர்சித்த சீமான், அனிதா ராதாகிருஷ்ணன் சீர் கொடுத்த பின்னர் உதயநிதிக்கு ஜால்ரா அடிக்கிறார். திமுக தோல்விக்கு பென் நிறுவனம் காரணமா அல்லது உதயநிதி காரணமாக என நடக்கும் விவாதத்தை மறைக்க காங்கிரஸ் மீது பழி போடுகிறது திமுக.

கருணாநிதி மறைவுக்குப் பின் திமுக எந்த திசையில் செல்கிறது என்பதை பார்க்க வேண்டும். உண்மையான திமுககாரர்கள் வீட்டில் இருக்கிறார்கள். வாடகைக்கு ஆட்களை அழைத்து வந்து அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். மே 4ம் தேதி திமுக அதிமுக கூட்டணி அமைக்க பேச்சு நடத்தியதால் நாங்கள் திமுக தலைவரை பார்க்க செல்லவில்லை.

உதயநிதி பாஜகவுடன் அண்டர் டீலிங்கில் இருப்பதை தோலுரித்து காட்டுவோம். விஜய் ஆட்சியமைப்பதை தடுக்க பாஜக மேற்கொண்ட முயற்சியின் முக்கிய புள்ளியாக உதயநிதி இருந்தார். திமுகவால் காங்கிரசும் தோற்று 18 எம்எல்ஏக்களில் இருந்து 5 ஆக குறைந்து விட்டோம். சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்து விட்டோம். வரும் காலங்களில் உதயநிதி தலைமையில் திமுக மிகப்பெரிய தோல்விகளை சந்திக்கும்.

கூட்டணி ஆட்சியும், நேர்மையான ஆட்சியும் காங்கிரஸின் இரு கண்கள். முதல்வர் விஜய் ராகுல் காந்தி இடையிலான நல்ல நட்பு அனைவரும் அறிந்தது. இந்த கூட்டணி தொடர்ந்து நீடிக்கும்.

நெடுஞ்சாலைத்துறை, நகர்ப்புற வளர்ச்சித்துறைகளில் இருந்த 36 சதவிகித கமிஷன், பத்திரப்பதிவு செய்ய ஒரு ஏக்கருக்கு திமுக பெற்ற ரூ.7 லட்சம் நன்கொடை ஆகியவை தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. இதே போல் பல துறைகளில் ஊழல் குறைந்து வருகிறது. திமுக வாங்கிய கமிஷனை பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட்டணி தர்மத்திற்காக அதை வெளியில் சொல்லவில்லை.

பாஜக அனைத்து தில்லாலங்கடி வேலைகளை செய்தும் தமிழகத்தில் வெற்றி பெற முடியாததால், பெயரை, உடையை மாற்றி அண்ணாமலையை இறக்கி விட்டுள்ளனர். அண்ணாமலையின் புதிய கட்சி ஆர்.எஸ்.எஸ்ஸின் பி பிளான். புதிய முகமூடியுடன் வந்துள்ள அண்ணாமலைக்கு எனது வாழ்த்துக்கள். ராஜினாமாவை ஏற்றுக் கொண்டோம் என பாஜக இதுவரை கடிதம் மூலம் அறிவித்தது இல்லை. போலிகளை தமிழக மக்கள் நம்பமாட்டார்கள்.

அதிமுக வரலாறாக மாறிக்கொண்டிருப்பது வருத்தமான விஷயம். விருதுநகர் மாவட்டத்தில் கட்சியை முடித்தது ராஜேந்திர பாலாஜி என்றால், தமிழகத்தில் மொத்தமாக முடித்து வைத்த பெருமை பழனிச்சாமியை சாரும். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆத்மா இந்த துரோகத்தை மன்னிக்காது.

உதயநிதியால் பழுதடைந்த தமிழக அரசு இயந்திரத்தை சரி செய்ய கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள். பினராய் விஜயனும், பாஜகவும் ரகசிய கூட்டணியில் இருக்கிறார்கள் என்பது கேரள காங்கிரஸ்காரர்களின் எண்ணமாக இருந்தது. அதையே பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தி குறிப்பிட்டார். மார்க்சிஸ்ட் கட்சியின் கடிதத்துக்கு நாங்கள் ஜனநாயகப்பூர்வமாக பதில் அளிப்போம். பாஜக எதிர்ப்பு அரசியலில் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம்.

நாடாளுமன்றத்தில் பாஜக கூட்டணி, இண்டியா கூட்டணி, பாஜக பி டீம் என 3 அணிகள் உள்ளன. பாஜக பி டீமில் புதிதாக ஒரு கட்சி விரைவில் சேர்ந்து விடும். ஜீன் 8ல் நடைபெறும் இண்டியா கூட்டணி கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அறிவித்ததன் மூலம், அக்கட்சி பாஜகவின் பீ டீம் என்பது உறுதியாகி உள்ளது. இவ்வாறு மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.



■ பாரதிய ஜனதா கட்சி நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் SC & ST நிலை குழு தலைவர் மற்றும் முன்னாள் மத்திய இணை அமைச்சர் பக்கன் சிங் குலாஸ்தே நீலகிரி மாவட்ட படுகர் சமுதாயம் ST பட்டியலில் சேர்த்தல் சம்பந்தமாக மனு அளிக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டத்தில் மோகன்ராஜ் மாவட்ட துணை தலைவர் பரமேஸ்வரன் பிற மொழி பிரிவு மாவட்ட அமைப்பாளர் சம்பத் ஆகியோர் உடன் இருந்தனர்

## உலக சுற்றுச்சூழல் தினம் சுற்றுச்சூழலை பாதுகாக்க வலியுறுத்தி பசுமைத்தாயகம் தலைவர் முனைவர் சௌமியாஅன்புமணி பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்

பல்லாவரம், ஜூன்.08-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் கன்டோன் மென்ட் அரசு உயர்நிலை பள்ளியில் பசுமைத்தாயகம் மற்றும் கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மரக்கன்றுகள் நட்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா பசுமைத்தாயகம் மாநில துணைச் செயலாளர் ஐ.நா.கண்ணன் தலை மையில் நடைபெற்றது.



இதில் சிறப்பு விருந்தினர் களாக தர்மபுரி தொகுதி சட்டமன்ற உறுப் பினர், பசுமைத்தாயகம் தலைவர் முனைவர் சௌமியாஅன்புமணி, 3241-C அரிமா மாவட்ட ஆளுநர் லயன்.போஸ் ஆகியோர் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே எடுத்துரைத்தனர்.

உலக வெப்பம யமாவதை கட்டுப்படுத்த பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ ர்களும் தங்களது இல்லங்களில் மரக்கன்றுகள், வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பள்ளி மாணவர்களுக்கு நிழல் தரும் மரக்கன்றுகள், கனிதரும் மரக்கன்றுகள், பூச்செடிகள் ஆகியவற்றை முனைவர் சௌமியா அன்புமணி வழங்கினார்.

அதைத்தொடர்ந்து பள்ளி வளாகத்தில் நிழல் தரும் மரக்கன்றுகளை பசுமைத்தாயகம் தலைவர் முனைவர் சௌமியா அன்புமணி நட்டு வைத்து மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பசுமைத்தாயகம் மாநில செயலாளர் இர.அருள், பசுமைத்தாயகம் நிர்வா கிகள் இரா. வெங்கடேசன், பூக்கடை க.முனுசாமி, ரேணு கண்ணன், வழக்கறிஞர் பாலாஜி, அரிமா சங்கம் நிர்வாகிகள் மண்டல தலை வர் அரிமா தனசேகர், அரிமா செல்லப்பா, அரிமா இரவிசங்கர், அரிமா மு.அண்ணாமலை, அரிமா மதியழகன், அரிமா இராஜேந்திரன், மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள் , இயற்கை ஆர்வலர்கள், பள்ளி ஆசிரியர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ இரவில் நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்கானிக்கும் தேனி மாவட்ட காவல்துறையினர் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹாப்ரியா, உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், புக்கசாகரம் கிராமத்தில், Schaeffler இந்தியா லிமிடெட் நிறுவனம் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ், அடர் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, துணை ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், BiotaSoil பவுண்டேஷன் நிறுவனர் செந்தில் முருகன், Schaeffler India நிறுவன மேலாளர் (சமூக பொறுப்பு நிதி)பரத், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## பூச்சிஅத்திபேடு அருகே வாணிசத்திரத்தில் IPDA தொண்டு நிறுவனம் சார்பில் 1200 மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம் பேக் வழங்கும் நிகழ்ச்சி

திருவள்ளூர், ஜூன்.08-

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் பூச்சிஅத்திபேடு அருகே வாணிசத்திரத்திரம் முனியப்பா செட்டியார் திருமண மஹாலில் ஒருங்கிணைந்த மக்கள் சேவை மேம்பாட்டு சங்கம் (IPDA-NGO) சார்பில் 5ம் ஆண்டு கோடுவள்ளி வாணிசத்திரம் கண்ணிகாபுரம் ஆயிலச்சேரி பூச்சிஅத்திபேடு அலமாதி ஊராட்சிகளில் உள்ள ஏழை எளிய குடும்பங்களை சேர்ந்த 1200 மாணவ மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம், பேக், வழங்கும் விழா IPDA NGO நிறுவனரும் கோடுவள்ளி முன்னால் ஊராட்சி மன்ற தலைவரும் சமூக சேவகருமான A.குமார், தலைமையில் நிகழ்ச்சி தொகுப்பாளர் K.அமரன் மற்றும் K.மேகலாகுமார் முன்னிலையில் 06.06.2026 அன்று மாலை 4:00 மணியளவில் நடைபெற்றது

இவ்விழாவில் எல்லாபுரம் வட்டாரவளர்ச்சி அலுவலர் அற்புதராஜ், வேல்டு டிரஸ்ட்டு சமுக சேவை தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் சமூக ஆர்வலர் பொன்பரசுராமன், மு.திமுக. மா. கவுன்சிலர் கோடுவள்ளி தங்கம்முரளி, மு.ஊரா.ம.தலைவர் ரகு, ஆச்சிமசால கம்பெனி மேலாளர் கோவர்தன் NDR குடோன் மேலாளர் பாலாமுருகன் சென்னை சமுக சேவை NGO ராபர்ட், பியூர் கெமிக்கல் கம்பெனி மேலாளர் விக்னேஷ் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

## உதகை கீழ் தலையாட்டி மந்து பகுதியில் சிறுத்தை வீட்டிற்குள் புகுந்து தாக்கியதில் வயதான பெண்மணி படுகாயம்



உதகை, ஜூன்.08-

நீலகிரி மாவட்டம் உதகை கீழ் தலையாட்டி மந்து நகராட்சி நடுநிலைப்பள்ளி மைதானம் அருகில் உள்ள மாதா கோயில் பின்புறம் வசித்து வரும் விஷாமா என்பவரை சனிக்கிழமை அன்று இரவு சுமார் 11.50 மணி அளவில் வீட்டிற்குள் புகுந்து சிறுத்தை தாக்கியது உடனடியாக தகவல் அறிந்து காவல்துறை மருத்துவத்துறை வனத்துறை ஆகியவற்றிக்கு தகவல் அளிக்கப்பட்டு நிலையில் உடனடியாக அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர் படுகாயம் அடைந்த விசாமா அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் அவர்களின் பேரன் மணி சிறுத்தை வீட்டுக்குள்ள தான் உள்ளது என்று கூறினார் காவல்துறை இதனால் பொதுமக்கள் இரவில் தயவு செய்து பாதுகாப்போடு இருக்கும் மாறும் இரவு 10 மணிக்கு மேல் யாரும் தயவு செய்து வெளியே வர வேண்டாம் என்று பிள்ளைகளுக்கும் பொது மக்களுக்கும் அறிவரை வழங்கினார். இது தொடர்பாக திங்கள்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கீழ் தலையாட்டி மந்து பொது மக்கள் மனு அளிக்க உள்ளனர் தங்கள் உயிரை பணயம் வைத்துஉள்ளே சென்ற காவல்துறைக்கு எ தலையாட்டுமந்து பொது மக்களின் அனைவரின் சார்பாக வணக்கங்களை தெரிவித்துக் கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் மனித தோமையார் ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சியில் ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரம் நடும் விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்றத் உறுப்பினர் ஜே.காமாட்சி ஜெயகிருஷ்ணன் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தார், இந்த நிகழ்ச்சியில் பொழிச்சலூர் ஊராட்சி கழகச் செயலாளர் மணி ஜெய மோகன், பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கிளை இணைச் செயலாளர் ஜான், மாவட்ட தொண்டர் அணி வினோத், பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி இளைஞரணி ராஜன், பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி கிளைச் செயலாளர் சுறா ரவி, பொழிச்சலூர் மேற்கு பொருளாளர் ஹர்ஷா, வார்டு நிர்வாகிகள் லோகு, பிரசாந்த், மற்றும் தவெக கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்க அழைப்பு



கிருஷ்ணகிரி, ஜூன்.08-

2026 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு தகுதியும் விருப்பமும் உள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தெரிவித்துள்ளார். சமூக சேவையில் சிறப்பாக செயல்பட்ட 15 முதல் 35 வயதுக்குட்பட்ட 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ரூ.1 லட்சம் ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் வழங்கப்படும். அரசு மற்றும் அரசு சார்பு நிறுவன ஊழியர்கள் விண்ணப்பிக்க முடியாது. விண்ணப்பங்களை 06.07.2026 மாலை 5.45 மணிக்குள் ஆன்லைன் மூலம் மட்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

## குன்னூர் தோட்டகலை துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் வட்டார விரிவாக்க சீரமைப்பு திட்ட பயிற்சி

குன்னூர், ஜூன்.08-

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, குன்னூர் வட்டாரம், விரிவாக்க சீரமைப்பு த்திட்டம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் விவசாயிக ளுக்கான பயிற்சியானது தோட்ட க்கலை உதவிஇயக்குநர் ம.விஜியலட்சுமி அறிவுரை யின்படி மாடிதோட்டம் மற்றும் வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல் குறித்து 04.06.2026 அன்று அளக்கரை கிராமத்தில் நடைபெற்றது.



இப்பயிற்சில் ஸ்பிரிங் பெர்ரி அங்கக வேளாண் பண்ணை, குன்னூர் மேலாளார் தேவ் மாடித் தோட்டம் மற்றும் வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தலின் அவசியத்தை குறித்து விளக்கினார். மேலும் தற்போது உணவே நஞ்சாகியுள்ள இச்சூழ்நிலையில் நஞ் சில்லா சாகுபடி முறைகள், அதாவது இரசாயன பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சாண கொல்லிகளின் பயன்பாட்டினை முற்றிலும் தவிர்த்து உயிர் உரங்கள் உயிரியல் பூச்சி விரட்டிகளின் பயன்பாடுகள் குறித்து விளக்கினார்.

மேலும் செடிவளர்ப்பு பைகள் பயன்படுத்தி காய்கறிகள், கீரை வகைகள் சாகுபடி செய்யும் முறை கள் குறித்து விளக்கினார். மண்புழு உர உற்பத்தி, கம்போஸ்ட் தயாரிப்பு முறைகள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சிக்கு வருகை புரிந்த உதவி தோட்டக் கலை அலுவலர் அஞ்சுகம் தற்போது 2026-27ம் நிதி ஆண்டிற்கான மானிய திட்டங்கள் குறித்து விளக்கினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராக்கேஷ் அவர்கள் அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் ஜான்போஸ்கோ ஒட்டுபொறி பயன்பாடு மற்றும் இயற்கை பயிர்வளர்ச்சி ஊக்கிகள் தயாரிப்பு முறைகள் குறித்து விளக்கினார்.

மேலும் இப்பயிற்சியில் எடப்பள்ளி வருவாய் கிராமத்தின் உழவர் யி.தேவராஜ் மற்றும் 50 திற்கும் மேற்பட்ட விவசா யிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## அண்ணாமலை நற்பணி மன்றம் சார்பில் சின்னமனூர் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நடைபெற்றது

சின்னமனூர், ஜூன்.08-



தேனி தெற்கு மாவட்டம் அண்ணாமலை நற்பணி மன்றத்தின் சார்பாக சின்னமனூர்வலசக்தி விநாயகர் கோவி லில்கலந்தாய்வுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யும்கூட்டமும் நடைபெற்றதுகூட்டத்துக்கு சின்னமனூர் நகர தலைவர் கார்த்திக் குமார் வரவேற்புரை ஆற்றினார்மாநிலத் தலைவர் வேல் கண்ணன் உத்தரவின் பேரில் தேனி தெற்கு மாவட்ட தலைவர் சசிகுமார் பரிந்துரையின் படி புதிய நிர்வாகிகளை தேர்வு செய்யப்பட்டது உடன் தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி தலைவர் திலீபன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மகளிர் அணியினர் நகர ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள் இந்நிகழ்ச்சியில் சின்னமனூர் நகர் பொதுச் செயலாளர் ஈஸ்வரன்,மாரிமுத்து நன்றி உரை ஆற்றினார்கள் தேனி தெற்கு மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் தேர்வுசெய்யப்பட்டார்கள்



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் அ.தி.மு.க.துணை பொது செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி பிறந்தநாளை முன்னிட்டு கர்நாடக மாநில அ.தி.மு.க.நிர்வாகிகள் எம்.துரை.ஜெ.பன்னீர்செல்வம்.பி.சுப்பிரமணி சந்திரசேகர், ரவிக்குமார் வெங்கடேஷ் ஆகியோர் மாலை மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், சுந்தரமடையான் ஊராட்சியில் தோட்டக்கலைத்துறையின் மூலம் பாரமரிக்கப்பட்டு வரும் நாற்றங்கால் பண்ணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.M.சிவகுரு பிரபாகரன், பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.திவ்யான்ஷீநிகம்,இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



## திருப்பத்தூர் அருகே தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய எம்.எல்.ஏ. திருப்பதி நன்றி தெரிவித்த பொதுமக்கள்



திருப்பத்தூர், ஜூன்.08-

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அடுத்த ராஜமங்கலம் பகுதியில் வசித்து வரும் சுரேஷ் என்பவரின் குடிசை வீட்டில் நேற்று திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் வீடு முழுவதும் எரிந்து சேதமடைந்தது. தீ மளமளவென பரவியதால் அருகில் இருந்த அருணா என்பவரின் குடிசை வீட்டிற்கும் தீ பரவி, இரண்டு வீடுகளும் பெரும் சேதமடைந்தன.

மேலும் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர். எனினும், வீடுகளில் இருந்த பொருட்கள் பெருமளவில் எரிந்து நாசமாயின.

இந்த நிலையில், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருப்பதி சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் உடனடி நிவாரணமாக ரூ.10,000 வழங்கினார்.

பின்பு அத்துடன், தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விரைவாக அரசு சார் பில் வீடு கட்டித்தர தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

தீ விபத்தில் வீடுகளை இழந்த குடும்பத்தினர், "எங்களிடம் உணவுக்குக் கூட வழியில்லை, தங்குவதற்கும் இடமில்லை" எனக் கண்ணீர் மல்க வேதனையை வெளிப்படுத்தினர். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

தீ விபத்து நடந்த உடனே சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு, நிவாரண உதவி வழங்கியதுடன், புதிய வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்ட திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திருப்பதிக்கு பாதிக்கப்பட்ட குடும்பத் தினரும், ஊர் பொதுமக்களும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தனர். நிகழ்வில் திருப்பத்தூர் ஒன்றிய செயலாளர் சாமிநாதன் உடன் இருந்தார்.

## பொழிச்சலூரில் 22 லட்சம் ரூபாய் மதிப்பில் ஏரி புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது அதை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி நேரில் ஆய்வு



பல்லாவரம், ஜூன்.08-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பொழிச்சலூரில், இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை சார்பில் 22 லட்சம் ரூபாய் மதிப்பில் நடைபெற்று வரும் ஏரி புனரமைப்புப் பணிகளை, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சியில், சுமார் 7 ஏக்கர் பரப்பளவு கொண்ட வடக்குத் தாங்கல் ஏரியும், அதனை ஒட்டி சுமார் 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட தெற்குத் தாங்கல் ஏரியும் அமைந்துள்ளன.

கடந்த சில காலமாக இந்த ஏரிகளில் கழிவுநீர் கலந்தும், முட்புதர்கள் மண்டியுமிருந்தன. மேலும், இப்பகுதி குப்பை கொட்டும் இடமாக மாறி வந்ததால், ஏரிகளைத் தூர்வாரி தூய்மைப்படுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, இந்த ஏரிகளைச் சீரமைக்க 'இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை' என்ற தனியார் அமைப்பு முன்வந்தது. இதன்படி, சுமார் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏரியிலுள்ள குப்பைகள் மற்றும் கழிவுநீரை அகற்றி, தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, சுற்றிலும் வேலி அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இங்கு நடைபெற்று வரும் பணிகளைப் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி அவர்கள் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, பணிகளைத் தரமாகவும், மழைக்காலம் தொடங்கவுள்ளதால் மிக விரைவாகவும் முடிக்குமாறு அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, ஏரியை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் நிர்வாகிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் காமாட்சி அவர்கள் சால்வை அணிவித்துத் தனது வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது சமூக ஆர்வலர் சந்தானம், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆசியா மகேந்திரன், பொழிச்சலூர் ஊராட்சி கழகச் செயலாளர் மணி ஜெய மோகன், பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கிளை இணைச் செயலாளர் ஜான், பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி இளைஞரணி ராஜன், பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி கிளைச் செயலாளர் சுறா ரவி மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்




## தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் காமாட்சிபுரம் கிராமத்தில் 10.06.2026 அன்று மக்கள் தொடர்பு முகாம்

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற உள்ளது

தேனி, ஜூன்.08-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சீப்பாலக்கோட்டை வருவாய் கிராமம், உட்கடை காமாட்சிபுரம் கிராமத்தில் 10.06.2026 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளது.

உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை (பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை கோருதல், புதிய குடும்ப அட்டை கோருதல், ஆதிதிராவிடர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, விபத்து நிவாரணம், விவசாயத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் இதர துறைகள்) காமாட்சிபுரம் கிராமத்தில் நடைபெறும் மக்கள் தொடர்பு முகாமில் நேரில் மனுவினைக் கொடுத்து பயன்பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



## ளையாத்தூர் அருள்மிகு ஸ்ரீ பிரஹந்நாயகி உடனுறை அருள்மிகு ஸ்ரீ வளைவநாதீஸ்வரர் ஆலய முதலாம் ஆண்டு விழா

ராணிப்பேட்டை, ஜூன்.08-

ராணிப்பேட்டை மாவட்டம் வளையாத்தூரில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பிரஹந்நாயகி உடனுறை அருள்மிகு ஸ்ரீ வளவநாதீஸ்வரர் ஆலய முதலாம் ஆண்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது முன்னதாக யாக சாலைகள் அமைத்து 108 ஓம திரவியங்கள் கொண்டு யாக பூஜைகள் செய்து பிறகு 108 சங்காபிஷேகம் ருத்ர ஜபம் ஹோமம் விக்னேஸ்வர பூஜை மகா அபிஷேகம் செய்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வளவநாதீஸ்வரருக்கு சிறப்பு ஆராதனையும் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஆலய அறங்காவலர் குழு தலைவர் துணைத் தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் பக்தர்கள் ஊர் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## காவேரிப் பட்டணம் ஹரி நகரில் ஸ்ரீ வலம்புரி விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம்





கிருஷ்ணகிரி, ஜூன். 08-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அடுத்த எர்ர அள்ளி ஊராட்சி ஹரி நகரில் புதியதாக கட்டப்பட்ட ஸ்ரீ வலம்புரி விநாயகர் திருக் கோவில் ஜீரேனாத்தாரன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது முன்னதாக காவேரிப்பட்டணம் தென் பெண்ணை ஆற்றில் இருந்து புனித நீர் மற்றும் முளைப்பாரி எடுத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது இதைத் தொடர்ந்து முதற்கால பூஜை ஆரம்பம் சோம கும்ப பூஜை செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். திருவிழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

## தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு மத்திய அரசு ரூ.531 கோடி

சென்னை, ஜூன்.08-

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் (2026-27) ரூ.531.54 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, இந்தியாவின் தேசிய நெடுஞ் சாலைகளின் மொத்த நீளம் சுமார் 1,46,560 கி.மீ. ஆகும். தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை அமைப்பதும், பராமரிப்பது உள்ளிட்ட பணிகளை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலை அமைச்சகம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆகியவை மேற்கொள்கின்றன.

தேசிய நெடுஞ் சாலைகளில் மேம்பாலங்கள் அமைக்கும் பணிக்காக, 'சேது பந்தம் திட்டம்' 2016ம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னர் இது, சேது பாரதம் திட்டமாக மாற்றப்பட்டது. இத்திட்டத்தில், தேசிய நெடுஞ் சாலையில் உள்ள ரயில்வே கேட்களை அப்புறப்படுத்தி மேம்பாலங்கள் கட்டும் திட்டமும் விரிவுப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, தேசிய நெடுஞ்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், நாடு முழுவதும் 230 ரயில்வே கேட்கள் தேசிய நெடுஞ் சாலைகளில் இருப்பது கண்டறியப்பட்டன. தமிழகத்தில் 9 ரயில்வே கேட்கள் கண்டறியப்பட்டு, தற்போது வரை 6 கேட்களை அகற்றி மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. திருச்சியில் மேம்பாலம் பணி முடியும் தருவாயில் உள்ளது.

நீடாமங்கலம் மேம்பாலப் பணி ரூ.170 கோடியில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. ஆம்பூர் ரெட்டித் தோப்பு பகுதியில் ரயில்வே மேம்பாலம் பணி ரூ.65.98 கோடியில் பணி நடைபெறுகிறது. இந்த இரண்டு பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ.81.54 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுதவிர, தமிழகத்தில் நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலப் பணிகளுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மொத்தம் ரூ.531.54 கோடியை மேம்பால பணிகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுகுறித்து, ஓய்வு பெற்ற ரயில்வே தொழிற் சங்க தலைவர் மனோகரன் கூறும்போது, "தமிழகத்தில் ரயில்வே கேட்களை அகற்றி, மேம்பாலம் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இதுபோல, நாடு முழுவதும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள ரயில்வே கேட்களை அப்புறப்படுத்த, சேது பாரதம் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்'' என்றார்.

## 2 கோடி பார்வையாளர்களை எட்டிய ராமேசுவரம் அப்துல் கலாம் நினைவகம்

ராமேசுவரம், ஜூன்.08-

ராமேசுவரத்திலுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் தேசிய நினைவிடத்துக்கு இதுவரை 2 கோடி பார்வையாளர்களுக்கு மேல் வந்து சென்றுள்ளதாக டி.ஆர்.டி.ஓ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்துல் கலாம் குடியரசுத் தலைவர் பதவிக் காலத்துக்கு பிறகு நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாணவர்களுக்கு உத்வேகம் ஊட்டும் உரையாற்றி வந்தார்.

இந்நிலையில் கடந்த 2015 ஜூலை 27ம் தேதி மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் உள்ள கல்லூரி விழாவில் பேசிக்கொண்டிருந்தபோதே உயிரிழந்தார். பின்னர் அவரது உடல், சொந்த ஊரான ராமேசுவரம் தீவில் உள்ள பேக்கரும்பில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் அவரது நினைவாக மத்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சார்பில் 'அப்துல் கலாம் தேசிய நினைவகம் அமைக்கப்பட்டு 2017ம் ஆண்டு ஜூலை 27ம் தேதி பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைத்தார்.

கலாம் நினைவகத்தின் நுழைவுப் பகுதியில் கலாம் வீணை வாசித்தபடி அமர்ந்திருக்கும் வெண்கலச் சிலை, கலாம் பயன்படுத்திய பொருட்கள், நூல்கள், உடைகள், கலாமின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியங்கள், கலாமின் பல்வேறு காலகட்டப் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் இங்குள்ள நான்கு காட்சிக் கூடங்களில் கலாமின் மாணவப் பருவம், விஞ்ஞானியாகப் பணியாற்றிய காலம், குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய காலம், உலகத் தலைவர்களுடன் கலாமின் புகைப்பட ஓவியங்கள் மற்றும் உருவச் சிலைகள், அவரது கண்டுபிடிப்பின் மாதிரி வடிவங்கள் ஆகியவையும் வைக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய கரோனா பரவலைத் தொடர்ந்து அரசு பொது முடக்க காலத்தில் கலாமின் தேசிய நினைவகம் 2020 மார்ச் 17 அன்று மூடப்பட்டு 525 நாட்களுக்குப் பிறகு 2021 ஆக.24 அன்று மக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

இந்நிலையில் ஜூன் 7 அன்று அப்துல்கலாம் தேசிய நினைவகம் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டு 3,237 நாட்கள் ஆன நிலையில் ஞாயிற்றுக்கிழமையுடன் 2 கோடி பார்வையாளர்கள் கலாம் நினைவகத்தைப் பார்வையிட்டுள்ளனர். இந்நிகழ்வை இனிப்பு வழங்கி டி.ஆர்.டி.ஓ அதிகாரிகள் கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் கலாமின் பேரன் ஷேக் சலிம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மேலும் 2 கோடி பார்வையாளர்களைக் கடந்தபோது வந்த மக்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.



## ஆற்காட்டில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா

ராணிப்பேட்டை, ஜூன்.08-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஆரணி ரோடு காவல் நிலையம் அருகாமையில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆற்காடு அதிமுக சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இதில் ஒன்றிய செயலாளர் அன்பழகன் நகரச் செயலாளர் ஜிம் சங்கர் உள்ளிட்ட அதிமுக மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடர ஆளுநர் அனுமதி: இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது விசாரணை

சென்னை, ஜூன்.08-

திமுக எம்எல்ஏவும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி, அதிமுக ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது, வேலை வாங்கித் தருவதாக கூறி பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்த விவகாரத்தில் சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறையும் தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்தது. செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஓராண்டுக்கும் மேலாக சிறையில் இருந்த அவர், பின்னர் நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கில் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்தது.

முன்னாள் அமைச்சர் என்பதால் செந்தில் பாலாஜி மீது விசாரணை நடத்த மாநில அரசின் அனுமதி அவசியம். அந்த வகையில், செந்தில் பாலாஜி மீது மேல் நடவடிக்கை மற்றும் விசாரணைக்கு அனுமதி கோரி தலைமைச் செயலருக்கு அமலாக்கத் துறை கடந்த மே 15ம் தேதி கடிதம் எழுதியது. அதன் பேரில், ஆளுநருக்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியதை அடுத்து, ஆளுநரும் அனுமதி அளித்துள்ளார்.

இதுகுறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறியுள்ளதாவது: ஆளுநர் அனுமதி அளித்துள்ளதால், இந்த கோப்பு உடனடியாக தலைமைச் செயலகத்துக்கு செல்லும். அதன்பிறகு, செந்தில் பாலாஜி மீது வழக்கு தொடர அனுமதி அளித்து தமிழக அரசு அதிகாரப் பூர்வமாக அரசாணை வெளியிடும். தற்போது எம்.பி., எம்எல்ஏக்களுக்கான சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அரசாணை வெளியான பிறகு, நீதிமன்றத்தில் அந்த அனுமதி கடிதத்தை அமலாக்கத் துறை தாக்கல் செய்யும். அதன் பின்னர், நீதிமன்றம் செந்தில் பாலாஜி மீதான குற்றச்சாட்டுகளை பதிவு செய்து, வழக்கின் முறையான விசாரணையைத் தொடங்கும். அமலாக்கத் துறை தனது தரப்பு சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி விசாரணையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும்.

தற்போது ஆளுநரின் அனுமதி கிடைத்துள்ளதால் இந்த வழக்கின் முட்டுக்கட்டை நீங்கி, சிறப்பு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு எதிரான விசாரணை வேகமெடுத்து, இறுதிக் கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கும். அதேநேரம், அரசு அனுமதி அளித்ததை எதிர்த்தோ, தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரியோ உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி மேல்முறையீடு செய்ய சட்டப்பூர்வ வாய்ப்புகளும் உள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# மாவட்ட அறங்காவலர் சிவகங்கை திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ஏஆர்.ஜெயமூர்த்தி தந்தை மறைவு

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் அஞ்சலி


சிவகங்கை ஜூன்.8-

சிவகங்கை மாவட்ட திமுகவின் திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகிப்பவர் பெரியகோட்டை ஏ.ஆர்.ஜெயமூர்த்தி ... பெரியகோட்டை வழுதனி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவராகவும் . சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட அறங்காவலராகவும் பணியாற்றி வருகிறார்..

இவரது தந்தையார் பெரிய கோட்டை பெரி. ஆறுமுகம் வயது 86 வயது மூப்பின் காரணமாக 6 ந்தேதி இரவு இயற்கை எய்தினார்...


இவர் பெரியகோட்டை ஊராட்சியின் முன்னாள் துணைத்தலைவராக பதவி வகித்துள்ளார்...

தகவலறிந்த சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர். முன்னாள் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பெரியகோட்டை சென்று ஆறுமுகம் பூத உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தி தனது இரங்கலைத் தெரிவித்தார்...



மறைந்த பெரி. ஆறுமுகத்திற்கு ஏஆர்.சந்தானமூர்த்தி ஏஆர்.கிருஷ்ணமூர்த்தி ஏஆர்.ஜெயமூர்த்தி மற்றும் மகள் ஜெயபாரதி ஆகிய பிள்ளைகள் உள்ளனர்...

இதனையடுத்து இறுதி சடங்குகளில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர். மானாமதுரை நகர்மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி . சமூக ஆர்வலர் பச்சேரி வள்ளல் சி.ஆர்.சுந்தரராஜன் . ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம் . துரை.இராஜாமணி . அ.முத்துச்சாமி . மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச்சாமி . கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் இடைக்காட்டூர் ஆ.மு.சண்முகநாதன். . மாவட்ட விளையாட்டு அணி கே.எஸ். நாராயணன் . மாவட்ட மாணவரணி கதிர்.ராஜ் குமார் . மாவட்ட விவசாய அணி சொக்கனாதிருப்பு டி.ஆர்.சேகர் . மாவட்ட வர்த்தக அணி மீனாட்சி கட்பீஸ் ஆர்.தனசேகரன் . மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் வளர்மதி கலைச்செல்வன் . மாவட்ட மகளிர் தொண்டரணி ஒமேகா திலகவதி கண்ணன் . மன்னர் மன்னன் . பெரிய கோட்டை ரவீந்திரன் . காளிபட்டி குமார்



மாணவரணி கார்த்திக் . செம்புக்குட்டி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் மாலை வைத்து மரியாதை செலுத்தினர்.

# தங்கமயில் ஜுவல்லரியின் புதிய கிளைகள் சென்னை பல்லாவரம் மற்றும் நீலாங்கரையில் திறப்பு

நீலாங்கரை, ஜூன்.8-

மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தங்கமயில் ஜூவல்லரி, கடந்த 34 ஆண்டுகளாக நகை விற்பனைத் துறையில் தனித்துவமான இடத்தைப் பெற்று, 45 லட்சத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையுடன் தமிழகம் முழுவதும் 66 கிளைகள் மூலம் சேவையாற்றி வருகிறது. இந்நிறுவனம் தனது புதிய கிளைகளை சென்னை பல்லாவரம் மற்றும் நீலாங்கரையில் திறக்கப்பட்டது.





புதிய ஷோரூம்களில் நவீன வசதிகளுடன் கூடிய பிரத்தியேக பிரைடல் ஸ்டோர் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மேலும், “தங்க மாங்கல்யம்” என்ற தனித்துவமான திருமண நகை கலெக்ஷனும் வாடிக்கையாளர்களுக்காக அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

மணமகள்களுக்கான தங்க, வைர, ரத்தினக் கற்கள் பதித்த ஆபரணங்கள், வெள்ளி நகைகள் உள்ளிட்ட பல்வேறு திருமண நகை வடிவமைப்புகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை இல்லாத அளவிலான திருமண நகை கலெக்ஷன்கள் மற்றும் பிரைடல் செட்களை தங்கமயில் வடிவமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறுவன நிர்வாகிகள் கூறுகையில், “தரமான சேவை, நியாயமான விலை மற்றும் வாடிக்கையாளர்களின் நீண்டகால நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எங்களது வளர்ச்சி பயணம் தொடர்ந்து வருகிறது. பல்லாவரம் மற்றும் நீலாங்கரை மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு இந்த புதிய ஷோரூம்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதிநவீன உள்கட்டமைப்பு, விரிவான பார்க்கிங் வசதி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கும் வகையில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன” என்றனர்.

திறப்பு விழா சிறப்பு சலுகைகள்:

செயின்களுக்கு சேதாரம் 1.99% முதல் 5.99% வரை.

மற்ற தங்க நகைகளுக்கு சேதாரம் 7.99% முதல் 13.99% வரை.

7 காரட்டுக்கு மேற்பட்ட பெல்ஜி கட் வைர நகைகள் வாங்குபவர்களுக்கு ரூ.30,000 வரை தள்ளுபடி.

வெள்ளி நகைகளுக்கு கிலோவுக்கு ரூ.10,000 வரை தள்ளுபடி.

சில்வர் ஜுவல்லரி மற்றும் பரிசுப் பொருட்களுக்கு 10% முதல் 50% வரை தள்ளுபடி.

பிளாட்டினம், ரூபி, எமரால்டு மற்றும் ரோஸ் கோல்டு நகைகளுக்கு சேதாரத்தில் 50% தள்ளுபடி.

ரூ.2 லட்சத்துக்கு மேல் வாங்கி சேமிப்புத் திட்டத்தில் இணையும் அனைவருக்கும் நிச்சயப் பரிசு.,

ஜூன் 14, 2026 வரை மட்டுமே இந்த சிறப்பு சலுகைகள் என்றனர்.

இந்த திறப்பு விழாவில் தங்கமயில் ஜூவல்லரியின் இணை நிர்வாக இயக்குநர்கள் : Ba. ரமேஷ், N.B. குமார் மற்றும் B.ராஜேஷ், நிதித்துறை நிர்வாகிகள், ஆடிட்டர் கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக (Adityaram Group) நிறுவனர். ஆதித்யாராம் கலந்துகொண்டு நீலாங்கரை தங்கமயில் புதிய கிளைகளை திறந்து வைத்து விழாவை சிறப்பித்தார்.

# ஆகாஷ் மரண வழக்கில் தொடர்புடைய காவல்துறையினரை கைது செய்ய வேண்டும்: பொன் முருகேசன் எச்சரிக்கை

திருச்சி ஜூன்.8-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்த தேவேந்திரகுல வேளாளர் சமூக இளைஞர் ஆகாஷ் காவல்துறை காவலில் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறை அதிகாரிகளை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் பொன் முருகேசன் வலியுறுத்தியுள்ளார்.





இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆகாஷின் சந்தேக மரணத்தை கொலை வழக்காக பதிவு செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டிருந்த போதிலும், சம்பவத்தில் தொடர்புடைய காவல்துறையினர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆகாஷின் உடலை வாங்க மறுத்து அப்பகுதி மக்கள் மூன்று மாதங்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்ட போதிலும், தமிழக அரசு மற்றும் காவல்துறை நிர்வாகம் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் காத்து வருவது வருத்தமளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் ஆகாஷின் மரணத்திற்கு காரணமான காவல்துறை அதிகாரிகளை உடனடியாக கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தவறினால் அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகத்தின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் பொன் முருகேசன் எச்சரித்துள்ளார்.

# “கேஸ் விலை உயர்வை திரும்பப் பெற மத்திய அரசுக்கு விஜய் அழுத்தம் கொடுக்க வேண்டும்”: பிரேமலதா

சென்னை, ஜூன்.08-

மத்திய அரசிடம் உரிய அழுத்தம் கொடுத்து, கேஸ் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற முதல்வர் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாட்டின் ஒட்டுமொத்த பண வீக்கமும், விலைவாசி உயர்வும் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் சூழலில், மீண்டும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு (லிறிநி) சிலிண்டரின் விலையை உயர்த்தி மத்திய அரசு அறிவித்திருப்பது கடும் அதிர்ச்சியளிக்கிறது.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான சமையல் எரிவாயு விலையை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து உயர்த்தி வரும் போக்கு, ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதிக்கிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையை காரணம் காட்டி, எண்ணெய் நிறுவனங்களின் லாபத்திற்காக பொது மக்கள் மீது கூடுதல் சுமையை ஏற்றுவது வன்மையான கண்டனத்திற்குரியது. ஏற்கனவே பெட்ரோல், டீசல் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

அதேவேளையில், தமிழகம் முழுவதும் நிலவி வரும் மின் வெட்டு, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளான கிழக்கு கடற்கரைச் சாலை (ணிசிஸி) பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அறிவிக்கப்படாத தொடர் மின் வெட்டு பொது மக்கள், சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்களின் இயல்பு வாழ்க்கையை கடுமையாகப் பாதித்துள்ளது. எந்த வித முன்னறிவிப்பும் இன்றி பகல் மற்றும் இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுவது பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பராமரிப்பு பணிகள் அல்லது பிற காரணங்களால் மின்சாரம் துண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், குறைந்தபட்சம் பொது மக்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கும் நடைமுறையை மின்சார வாரியம் கட்டாயமாக பின்பற்ற வேண்டும். நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜூன் 11ம் தேதி முதல்வர் விஜய் டெல்லி செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் போது கேஸ் விலை உயர்வைக் கண்டித்து, தமிழ்நாடு சார்பில் மத்திய அரசிடம் உரிய அழுத்தம் கொடுத்து, கேஸ் விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# பொள்ளாச்சி த.வெ.க.,வில் உட்கட்சி பூசல் வெடித்ததுள்ளதால் பரபரப்பு

பொள்ளாச்சி, ஜூன்.08-

பொள்ளாச்சி தவெகவில் உட்கட்சி பூசல் வெடித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மாற்றுக்கட்சியினருக்கு தவெகவில் முக்கிய இடம் கொடுப்பதற்கு தொண்டர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். கூட்டத்தில் பங்கேற்றால் கட்சியில் பதவி தருவதாக அறிவிக்கப்பட்டதற்கு தவெகவினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பொள்ளாச்சி ஆனைமலை கிழக்கு ஒன்றியம் தவெக சார்பில் ஆலோசனை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தனர். முதலமைச்சர் விஜய் படத்துடன் வைக்கப்பட்ட பேனரை தவெகவினர் அகற்றியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சாமானிய மக்களின் வயிற்றில் அடிக்கும் சிலிண்டர் விலை உயர்வு: ஒன்றிய அரசுக்கு எஸ்.டி.பி.ஐ. கட்சி கடும் கண்டனம்!

சென்னை, ஜூன்.08-

சாமானிய மக்களின் வயிற்றில் அடிக்கும் சிலிண்டர் விலை உயர்வுக்கு ஒன்றிய அரசுக்கு எஸ்டிபிஐ கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில பொருளாளர் முஸ்தபா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

வீட்டு உபயோக சிலிண்டர் விலையை மத்திய அரசு மீண்டும் உயர்த்தியிருப்பதற்கு எஸ்டிபிஐ கட்சி தனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்கிறது.

நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ள இந்த விலை உயர்வின்படி, வீட்டு உபயோக சிலிண்டர் ஒன்றின் விலை 29 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம்தான் சிலிண்டர் விலை 60 ரூபாய் உயர்த்தப்பட்டது. அதன்படி, கடந்த 3 மாதங்களுக்குள் ஒட்டுமொத்தமாக 89 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இது, ஏற்கனவே விலைவாசி உயர்வால் தவித்து வரும் சாமானிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் மாதாந்திர பட்ஜெட்டை முற்றிலும் சீர்குலைக்கும் செயலாகும்.

சமீபத்தில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலையும் பெருமளவு உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது வீட்டு உபயோக சிலிண்டர் விலையையும் உயர்த்தியிருப்பது ஏழை, எளிய மக்களை வஞ்சரிக்கும் செயலாகும். சர்வதேச சந்தையில் ஏற்படும் விலை மாற்றங்களின் அடிப்படையில் தான் இந்த விலை உயர்வு என்று அரசு தரப்பில் வழக்கம்போல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு விலை குறையும் காலங்களில், அதன் பலனை மக்களுக்கு வழங்காமல் விலையைக் குறைக்க மறுக்கும் அரசு, விலை உயரும் போது மட்டும் அந்தச் சுமையை உடனடியாக மக்கள் மீது திணிக்கிறது.

மக்களுக்கு எவ்வித நன்மையும் தராத இந்த 'விலை நிர்ணயக் கொள்கை' அப்பட்டமான மக்கள் விரோதப் போக்காகும். எனவே, ஏழை மற்றும் சாமானிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த விலை உயர்வை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என எஸ்டிபிஐ கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் நாங்கள் தோற்றுதான் போனோம் ஆனால் இறக்கவில்லை: அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி

சென்னை, ஜூன்.08-

தேர்தலில் நாங்கள் தோற்றுதான் போனோம் ஆனால் இறக்கவில்லை என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி அளித்துள்ளார். வாழ்க்கையில் எத்தனையோ இழப்புகளை பார்த்த எங்களுக்கு எத்தனை விஜய் வந்தாலும் கவலையில்லை. கருத்து வேறுபாட்டால் மாற்றுக் கட்சிக்கு சென்றவர்கள், தெளிவு கிடைக்கும்போது மீண்டும் வருவார்கள்.

விஜய்யின் தவெக கட்சி வேண்டாம் என்று 65 சதவீத மக்கள் மற்ற கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர். அதிகாரத்தில் இருப்பதால் நீங்கள் ஆடு புலி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். வாழ்க்கை என்பது ஒரு வட்டம், இதுதான் இயற்கை நீதி என்று ஆர்.பி.உதயகுமார் கருத்து தெரிவித்துள்ளார். ஒரு லெட்டர் பேடு கட்சி கூட தவெகவை நம்பி செல்லவில்லை. மாயாஜாலம் போல் தவெகவுக்கு ஆட்சி, அதிகாரம் கிடைத்துள்ளது.

மேகதாது அணை கட்டும் விவகாரத்தில் தவெக அரசின் அடுத்த கட்ட நகர்வு மர்மமாக உள்ளது. அதிமுக வெற்றி பெற்றிருந்தால், பல கட்சிகள் மாறிய நிர்மல்குமார் இங்கு வந்திருப்பார். கரூரில் 41 பேர் உயிரிழந்தபோது ஓடி ஒளிந்து கொண்டார் முதலமைச்சர் விஜய். விஜய்யின் பேச்சு ஆணவ பேச்சு, அவருக்கு வரலாறு தெரியாது; தியாகம், போராட்டம் எதுவும் இல்லாமல் வந்துவிட்டார். கைக்கூலிகளை வைத்துக் கொண்டு ஆள்பிடிக்கும் வேலையை செய்கிறார் விஜய். அதிமுகவினரை இழுக்கும் வேலைகளை செய்தால் விஜய் கடும் விளைவுகளை சந்திப்பார் என்று ஆர்.பி.உதயகுமார் பேட்டி அளித்துள்ளார்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161